## அத்தியாயம் 9

வருணிடம் அவளுடைய பிறந்த நாளன்று பேசியது தான் கீதா அவனுடன் பேசிய கடைசி முறை. அதற்கு பின் அவனும் அவளை அழைக்கவில்லை. அவளுக்கும் அவனுடன் பேசுவதற்கு விருப்பம் இல்லை. இருவரும் ஃபேஸ்புக் மூலமாகவும், வாட்சப் மூலமாகவும் ஒருவர் வாழ்வின் நிகழ்வுகளை மற்றவர் தெரிந்து கொண்டதோடு சரி..

ஜேஸியும் சென்னை வந்து விட கீதாவுக்கு தனியாக இருக்கும் உணர்வே வரவில்லை. அவளுடைய நண்பர்கள் அவளை தனியாக இருக்கவோ யோசிக்கவோ விட்டால் தானே!

வருணோ இந்தியா வருவதற்கான நாளை ஆவலோடு எதிர்நோக்கி இருந்தான். இதற்கிடையில் அவனுடைய கஸின்ஸ் கீதா பற்றி கேட்டபோதெல்லாம் அவள் வேலைப்பளு அதிகம், அவளை தொந்தரவு செய்ய வேண்டாம் என்று கூறி பேச்சை மாற்றினான். அவனுக்குமே இந்த பிரிவு கொஞ்சநாள் தேவைப்பட்டது. இவ்வாறு சென்று கொண்டிருக்கையில் ரேணுகாயின் திருமணமும் வந்தது. அதற்காக வருணும் இந்தியாவிற்கு வந்தான்.

அவனது வாட்சப் ஸ்டேட்டஸில் அவன், பிரியா அனு மற்றும் ரேவதியுடன் இருக்கும் போட்டோவை போட கீதா அதை பார்த்ததும் அவன் இந்தியாவில் இருப்பதை புரிந்து கொண்டாள். ஆனால் அவனுடன் பேச முயற்சிக்கவில்லை. அவனது குடும்பத்தினர் ரேணுகா திருமண வேலைகளில் பிஸியாக இருப்பதால் அனுவையும் அவள் பேசி தொந்தரவு செய்ய விரும்பவில்லை.

வருணும் அனு கீதாவை திருமணத்திற்கு அழைக்க வேண்டுமென கூறிய போது அவள் இந்தியாவில் இல்லை, அவளுடைய கார்டியனை பார்க்க யு.எஸ் சென்றிருப்பதாக கூறவும் சிறிது நேரம் வருத்தப்பட்ட ரேணுகாவும் நேத்ரா வந்து விட அவளுடன் ஷாப்பிங் செல்ல தயாரானாள்.

இப்படியாக கீதாவும், வருணும் ஒருவரை ஒருவர் பார்க்கவோ தொடர்பு கொள்ளவோ முயற்சிக்காமலே இருக்க ரேணுகாவின் திருமண நாளும் வந்தது. கீதா ஒருநாள் தவறாமல் வருணின் வாட்சப் ஸ்டேட்டஸை பார்த்து கொண்டு தான் இருந்தாள். திருமணத்திற்கு தன்னை அழைப்பான் என்று

அவளுக்கு ஒரு நப்பாசை இருந்தது என்னவோ உண்மை. ஆனால் வருணோ கீதா என்ற ஒருத்தி தன்னுடைய ஸ்டேட்டஸை பார்ப்பதையே ஒரு பொருட்டாக கருதாமல் திருமண வேலைகளில் பிஸியாக இருந்தான்.

ரேணுகாவின் திருமண நாள் அன்று காலை...

யோகாவை பார்க்க பார்லருக்கு சென்ற கீதா அங்கு புடவையுடன் ஃபுல் மேக்கப்புடன் நின்றிருந்த கீர்த்தியை பார்த்ததும் " ஹாய் கீர்த்தி□! லுக்கிங் வொண்டர்ஃபுல்! ஏதாச்சும் ஃபங்ஷனா□?" என்று ஆவலுடன் கேட்டாள்.

கீர்த்தி புன்னகையுடன் " ஆமா கீத்து□! என்னோட குளோஸ் ஃப்ரெண்டோட சிஸ்டருக்கு இன்னிக்கு மேரேஜ்☺" என்று பதிலளிக்கவும் கீதாவிற்கு ரேணுகா திருமணமாக இருக்குமோ என்ற சந்தேகம் வரவும் யாருக்கு திருமணம் என்று கேட்டாள்.

" என் ஃப்ரெண்ட் ஒருத்தன் ஜெர்மனில படிச்சிட்டிருக்கான்□. அவனோட சிஸ்டருக்கு தான் இன்னிக்கு மேரேஜ். கண்டிப்பா வரணும் கீர்த்தினு வேற சொல்லிட்டான்□. அதான் ரெடி ஆகிட்டு டாக்ஸிக்கு வெயிட் பண்ணிட்டு இருக்கேன்" என்று சொல்லவும் கீதாவிற்கு அவன் வருண் தான் என்று உறுதியாகவே தெரிந்தது.

அதற்கு மேல் அவனை பற்றி யோசிக்க விரும்பவில்லை அவள். என்ன யோசித்தாலும் அவன் சொன்ன விஷயங்கள் யாவும் பொழுதுபோக்குக்காக அவன் சொன்ன பொய்களாக  மட்டுமே அவளுக்கு தோன்றியது. தன்னை தவிர வேறு யாரும் அவ்வளவு குளோஸ் ஃப்ரெண்ட் இல்லையென கூறியவன் தன்னுடைய ஃபேஸ்புக் டைம்லைனில் சிறுவயது தோழர்கள் முதற்கொண்டு திருமணத்திற்கு அழைத்த புகைப்படத்தையும் பதிவிட கீதா அவனை பற்றிய தன்னுடைய அபிப்ராயம் மிகவும் சரி, இனி அவனுடன் தனக்கு எந்த நட்பும் தேவையில்லை என்று முடிவு செய்தாள்.

இருந்தாலும் அவளுடைய மனசாட்சி வருணை பற்றி கொஞ்சம் யோசி கீத்து என்று கத்தவும் " ஏதோ என்ன விட்டா அவனுக்கு ஃப்ரெண்ட்ஸே இல்லங்கிற மாதிரி சீன் போட்டான்□, எல்லாம் பொய்□. என்ன மட்டும் தான் ஃபேமிலி கிட்ட அறிமுகப்படுத்திருக்கேனு வேற இன்னொரு பொய்□. வாய

தொறந்தாலே பொய்□. நீ இவ்வளவு யோசிக்கிறியே.. பட் அவனுக்கு இன்னேரம் என்னோட நேம் கூட மறந்திருக்கும்□. டைம்பாஸுக்கு பேசுனவ தான□. சோ இனிமே அந்த வருண் யாருனு தெரியாத மாதிரியே நானும் நடந்துப்பேன்□□" என்று மனசாட்சியை அடக்கினாள்.

------------------------------------------------------------------------------------------------------------------------

ரேணுகாவின் திருமணம் முடிந்து அவள் புகுந்த வீடு சென்று அன்றோடு ஆறு மாதம் முடிந்திருந்தது. அவளது கணவன் சிவாவுக்கு ரேணுகாவின் குடும்பம் மிகவும் பிடித்து விட்டது. அவளது கேங்கின் ஃபேனாக மாறிவிட்டான். அவர்களுடன் சேர்ந்து அவளை கலாய்ப்பது அவனது தினசரி பொழுதுபோக்காகவே ஆகிவிட்டது .

கர்ப்பமாக இருக்கும் தங்கையை சிவா கையில் வைத்து தாங்குவதை கண்ட வருணுக்கு மனநிறைவாக இருந்தது. படிப்பு முடிந்த நிலையில் ஜெர்மனியிலேயே வேலையில் சேரலாமா இல்லை இந்தியாவில் செட்டில் ஆகலாமா என்ற குழப்பத்தில் இருந்தான் அவன்.

அந்த குழப்பத்திலும் கீதாவை பற்றி யோசிக்க தவறவில்லை அவன்.

அன்று அவ்வாறு அவளை பற்றி சிந்தித்தவாறு பால்கனியில் நடந்து கொண்டிருந்தான் வருண். குட்டி போட்ட பூனை மாதிரி அவன் பால்கனியில் நடந்து கொண்டிருப்பதை பார்த்த அனு இந்த அண்ணாவுக்கு என்னாச்சு என்று யோசித்தவாறு அவனிடம் சென்றாள்.

" அண்ணா ஏன் ரெஸ்ட்லெஸ்ஸா இருக்கிங்க□?? ஏதும் லவ் மேட்டரா□?"

" அனு! இந்த ஜென்மத்துல நான் யாரையும் லவ் பண்ணுறதா இல்ல.□ ஒருத்திய பண்ணின பாவத்துக்கே நான் தூக்கம் இல்லாம சுத்துறேன்□" என்று தெரியாமல் வாயை விட அனுவிற்கு ஆச்சரியமாய் போய்விட்டது.

" வாட்□?? நீங்க லவ் பண்ணிங்களா□?? யார அண்ணா□?? நம்ம ஊரா இல்ல சென்னை கேர்ளா□?? அவங்க என்ன பண்ணுறாங்க□??" என்று அடுக்கி கொண்டே செல்ல அவளை பார்த்து தலையில் அடித்து கொண்டான் வருண்.

" நீ ஓவரா எமோஷனல் ஆகுற அனு□. அது எல்லாமே முடிஞ்சு போன விஷயம்□. அவ ரொம்ப அடமண்ட். நம்ம குடும்பத்துக்கு செட் ஆகாது□"

" ஓ! அப்போ பிரேக் அப் ஆயிடுச்சா அண்ணா□? " என்று வருத்தமான குரலில் கேட்கவும் " பிரபோஸே பண்ணல□. அப்புறம் எங்க இருந்து பிரேட் அப்□?" என்று வருண் கூற அவளுக்கு அவன் கழுத்தை நெறிக்கும் அளவிற்கு கோபம் வந்தது.

" போங்க அண்ணா நீங்களும் உங்க லவ்வும்□! நோ கமெண்ட்ஸ், சிம்ப்ளி வேஸ்ட்□"

" அடியே நானே குழப்பத்துல இருக்கேன்□. நீ வேற" என்று சலித்து கொண்டான் வருண்.

அவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் நேத்ரா ரேவதியுடனும் பிரியாவுடனும் சேர்ந்து வர அவர்களிடமும் வருணின் கதையை அவள் கூற அவர்களும் அவனை வெட்டவா குத்தவா என்று பார்த்தனர்.

" இவரு பெரிய ரோமியோ□. இவரு ப்ரபோஸ் பண்ணாம அந்த பொண்ணுக்கு எப்பிடி லவ் பண்ணுறது தெரியும்□?? இங்க பொலம்புறத அவ கிட்ட பொலம்புனா கூட பாவப்பட்டு அந்த பொண்ணு லவ் பண்ணிருக்கும்□" என்று கடுப்பில் கூறினாள் பிரியா.

அவள் அவ்வாறு கூறவும் " பிரியா! உனக்கு அவள பத்தி தெரியாது□. என்னால அவ கிட்ட லவ் பத்தி சொல்ல முடியலடி□" என்று மறுபடி புலம்பினான்.

" அவ கிட்ட சொல்லாம அவங்க ஆயா கிட்டயா சொல்லுவ□?? " இது ரேவதி.

" அவ ரொம்ப கோவக்காரி ரேவா□. சப்போஸ் நான் லவ் பத்தி ஏதாச்சும் பேசி அவ என்ன தப்பா நெனச்சுட்டா என்ன பண்ணுறது□? ( நீ பேசாமலே அவ உன்ன பத்தி அப்பிடி தாண்டா நெனச்சிட்டு இருக்கா□ )"

" சரி! நீ பேச வேண்டாம்□. அவ அட்ரஸ் சொல்லு. நாங்க போய் பேசி பாக்குரோம்□"

" என்னது□ ?? நீங்க பேச போறிங்களா?" என்று அதிர்ச்சியானான் வருண்.

" பின்ன..உன்ன மாதிரி ஒருத்தன் இந்த ஜென்மத்துல அவ கிட்ட சொல்ல போறது இல்ல□. நீ கமிட் ஆகலனா எங்களால எப்பிடி கமிட் ஆக முடியும்□?? நீ சும்மாவே நம்ம ஃபேமிலி குரூப்ல மொக்க போட்டு சாகடிக்கிற□.. இதுல காதல் தோல்வி வேற நடந்தா எங்கள நீ கவிதை சொல்லுறனு சொல்லி மேல் லோகத்துகு பார்சல் பண்ணிடுவ□. சோ வேற வழி இல்ல .. நாங்க இந்த மேட்டர டீல் பண்ண போறொம்□" என்று பிரியா மூச்சுவிடாமல் சொல்லி முடித்தாள்.

" சரி! அந்த பொண்ணு நம்பர், அட்ரஸ் முக்கியமா அவ போட்டோ எல்லாமே கொஞ்சம் தேவைப்படும்□"

" அட்ரஸ் எனக்கு தெரியாது□" என்று கூறவும் நான்கு பேரும் சந்திரமுகி அவதாரம் எடுக்க வருண் வேகமாக " பட் போட்டோ போன் நம்பர் இருக்கு□" என்று கூறவும் சாந்தமானார்கள்.

" சரி.. போட்டோ போன் நம்பர் வாட்சப் பண்ணு"

" அவ நம்பர் உங்க கிட்டயே இருக்கு " என்று கூறவும் இப்போது குழம்புவது அவர்கள் முறை ஆயிற்று.

தலையை பிய்த்து கொண்ட அனு " ஐயா சாமி! நீ லவ் பண்ணி முடிக்குறதுக்குள்ள நாங்க எல்லாரும் கீழ்ப்பாக்கத்துல அட்மிட் ஆயிடுவோம் போல..கொஞ்சம் தெளிவா சொல்லு தெய்வமே" என்று கேட்டாள்.

நேத்ராவோ " எங்களுக்கு தெரிஞ்ச பொண்ணுனா யாருடா அது?" என்று கேட்க அமைதியாக அவளை பார்த்தவன் வெட்கத்துடன் " கீதா" என்று கூற நான்கு பேருக்கும் ஆனந்த அதிர்ச்சி.

" என்ன ? அண்ணியா?" என்று மறுபடியும் கேட்டு உறுதி செய்து கொண்டாள் பிரியா.

" இவ்வளோ நாளா எதுக்கு மறைச்ச எருமை?" என்று ரேவதி செல்லமாக கோவித்தாள்.

" ஓகே..நம்ம அண்ணி தான. நோ பிராப்ளம். இன்னிக்கே போய் பேசி முடிச்சிடுவோம்" என்றாள் அனு.

" ஏய்! மறந்துட்டிங்களா?? ஷீ இஸ் இன் யு.எஸ்" என்று நேத்ரா நினைவூட்ட வருண் "இல்ல அவ இங்க தான் இருக்கா" என்று சொல்லவும் அவர்கள் மீண்டும் குழப்பமாயினர்.

" இங்க இருக்காங்கனா ஏன் ரேணுகா மேரேஜூக்கு அண்ணி வரல?"

" பிகாஸ் நான் அவள இன்வைட் பண்ணல"

"ஏன் இன்வைட் பண்ணல"

"எங்களுக்குள்ள ஒரு சின்ன மிஸ்அண்டர்ஷ்டாண்டிங்...நாங்க பேசியே நாலு மாசம் ஆகுது" என்று அவன் சாதாரணமாக கூற அவர்கள் நால்வருக்கும் இவனை கொலை செய்யுமளவிற்கு ஆத்திரம் வந்தது.

" முடியலடி. நான் ரொம்ப நாள் இந்த பிரஷர் , சுகர் இல்லாம வாழனும்னு ஆசப்படுறேன். பட் இந்த மிஸ்டர் ஜெர்மனால எனக்கு ஹார்ட் அட்டாகே வந்துடும் போல"

" இது கொஞ்சம் சிக்கலான லவ் ஸ்டோரி தான்" என்று பெருமூச்சு விட்டாள் ரேவதி.

" இங்க பாருங்க! எனக்கு அதுலாம் தெரியாது. எனக்கு தெரிஞ்சது ரெண்டே விஷயம் தான்"

" சொல்லும்! சொல்லித் தொலையும்" என்றனர் நால்வரும்.

" ஒண்ணு என்னால கீதா இல்லாம வாழ முடியாது. ரெண்டாவது அவ ரொம்ப கோவப்படுறது நம்ம ஃபேமிலிக்கு சுத்தமா செட் ஆகாது. சோ நீங்க ரொம்ப யோசிக்காதிங்க. கொஞ்ச நாள்ல நானே அவள மறந்துடுவேன்" என்று சொல்லியபடியே அங்கிருந்து நகர்ந்தான்.

அவனை யோசனையாக பார்த்த நேத்ரா மற்றவர்களிடம் " ஹேய்! இங்க பாருங்க, கீத்துக்கு கால் பண்ணுங்கடி! இன்னிக்கு ஈவ்னிங் ஃபீனிக்ஸ்ல மீட் பண்ணலாமானு கேளுங்க! அப்புறம் இன்னொரு இம்பார்டெண்ட் விஷயம் இது எதுவுமே வருணுக்கு தெரிய கூடாது" என்று சொல்லிவிட்டு அடுத்து செய்ய வேண்டிய விஷயத்தை யோசிக்க ஆரம்பித்தாள்.